நகர்மன்றம்,
போடிநாயக்கனூர், நாள். 31.05.2021

2021ம் ஆண்டு மே மாதம் 31.05.2021ம் தேதி திங்கள்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற சாதராண கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திருமதி.தி.சகிலா, B.Com.,
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்

1) இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் மே 2021ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பதிவு செய்யலாம்.
(ந.க.எ.ண். 1103/2020/சி1)
**தீர்மான எண் : 98** பதிவு செய்ய அனுமக்கப்படுகிறது.

2) இந்நகராட்சிப் பொறியாளர் அவர்களின் மே 2021ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பதிவு செய்யலாம்.
(ந.க.எ.ண். 1103/2020/சி1)
**தீர்மான எண் : 99** பதிவு செய்ய அனுமக்கப்படுகிறது.

3)இந்நகராட்சி சொந்தமான பொறியியல் பிரிவிலுள்ள கீழ்க்கண்ட வாகனங்களுக்கு 2021–2022ம் ஆண்டிற்கான வாகன காப்பீட்டு புதுப்பித்தல் கட்டண தொகையாக National Insurance Company Ltd.,Bodinayakanur அவர்களுக்கு செலுத்துவதற்கான உத்தேச செலவினம் ரூ.2,00,000/– ஆகும். மேற்காணும் தொகையினை பொது (ம) குடிநீர் வடிகால் நிதியிலிருந்தும் செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வாகன விபரம் |
|---|---|
| 1 | TN 60 Q 5418 - Bolero |
| 2 | TN 60 Y 6345 - Qualis |
| 3 | TN 60 V 1693 - Bolero |
| 4 | TN 60 AX 9925 - Jet Rodding |
| 5 | TN 60 AX 9942 - Desilting Machine |

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1568/2021/இ1)**

**தீர்மான எண் : 100** அனுமதி அளிக்கப்படுகிறது,

4) போடிநாயக்கனூர் எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு எண்.2, பிளாக் எண்.45, நகரளவு எண்.41ல் நகராட்சிக்கு சொந்தமான சாலையில் சாலைகள் அமைக்கக்கூடாது என N.ராஜாராம் என்பவர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக எதிர்வாதுரை தாக்கல் செய்து வழக்கை தொடர்ந்து நடத்தி வரும் நகராட்சி வழக்கறிஞர் திரு.B.R.பாலமுரளி, B.B.A.,B.L., அவர்களுக்கு வாதுரைஞர் கட்டணம் ரூ.5000/–ஐ வழங்க கோரியுள்ளார். எனவே, மேற்படி வழக்குக்கு வாதுரைஞர் கட்டணமாக ரூ.5000/– பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.0955/2021/எப்2)**

**தீர்மான எண் : 101** அனுமதி அளிக்கப்படுகிறது,

**5)** இந்நகராட்சி பாதாள சாக்கடைத்திட்டத்தில் சாலைகாளியம்மன் கோவில் அருகில் உள்ள துணை கழிவுநீர் உந்து நிலையத்தில் உள்ள 50HP No.4 மின் மோட்டார்குரிய பேனல் போர்டின் சுவிட்ச் பழுதடைந்துள்ளதை புதிதாக பொருத்துவதற்கான உத்தேச செலவினம் ரூ.15,500/–ஐ குடிநீர் வடிகால் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | நிறுவனம் | தொகை |
|---|---|---|
| 1 | M.வைகுண்டம் ரீவைண்டிங் & இன்ஜினியரிங் ஒர்க்ஸ், தேனி | ரூ.15,400/– |
| 2 | இஸ்மாயில் ரீவைண்டிங் & இன்ஜினியரிங் ஒர்க்ஸ், சின்னமனூர். | ரூ.16,912/– |
| 3 | ஸ்ரீ சரவணக்குமார் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், தேனி. | ரூ.16,240/– |

**அலுவலக குறிப்பு:** வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M.வைகுண்டம் ரீவைண்டிங் & இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,தேனி ரூ.15,400/– அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கி, பட்டியல் தொகையினை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1725/2021/இ1)**
**தீர்மான எண் : 102** அனுமதி அளிக்கப்படுகிறது,

**6)** அ) இந்நகராட்சிக்கு சொந்தமான TN60AV1693 பொலிரோ வாகனத்திற்கு பேட்டரி பழுதடைந்து விட்டதால் புதிதாக பேட்டரி வாங்குவதற்கு ஆகும் செலவினம் ரூ.6800/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

ஆ) மேலும் மேற்படி பணியினை செய்வதற்கு அவசர அவசியம் கருதி **26.05.2021** அன்று நேரிடையாக விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனம் | தொகை |
|---|---|---|
| 1 | M/s Imperial Battery Corner, Theni. | ரூ.7150/– |
| 2 | M/s Imperial Battery Point, Bodinayakanur. | ரூ.6800/– |
| 3 | M/s M.R. Auto Mobiles And Battery Service, Theni. | ரூ.7050/– |

**அலுவலகக்குறிப்பு :–** வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் M/s Imperial Battery Point, போடிநாயக்கனூர் நிறுவனத்தாரின் விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் மேற்படி விலைப்புள்ளியினை ஏற்று அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்: 1626/2021/இ1)**

**தீர்மான எண் : 103** அனுமதி அளிக்கப்படுகிறது,

7) போடிநாயக்கனூர் நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யும் பிரதான குழாய் மற்றும் துணை பகிர்மான குழாய்கள் பழுது ஏற்பட்டு குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது. எனவே மேற்கண்ட பிரதான குழாய் மற்றும் துணை பகிர்மான குழாய்களில் எற்படும் பழுதுகளை 2021–22ம் ஆண்டிற்கு பழுது பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.8.00 லட்சத்தில் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்படி பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண். 1773/2021/இ1)**
**தீர்மான எண் : 104** 1 ம 2க்கு அனுமதி அளிக்கப்படுகிறது

8) போடிநாயக்கனூர் நகராட்சியில் பரவிவரும் கொரோனா தொற்றை சமாளிக்கும் பொருட்டு தமிழக அரசின் 144 தடை உத்திரவின் பேரில் காவல் துறை துணை கண்காணிப்பாளர் மற்றும் திட்ட இயக்குநர் அவர்கள் ஆலோசனை கூட்ட அறிவுரையின் படி இந்நகராட்சி பகுதிகளில் பொதுமக்கள் அதிகம் கடக்கும் பகுதியாகவும் நோய் தொற்று உள்ள குடியிருப்பை சுற்றியுள்ள பகுதிகளை நகரின் பிற பகுதிகளில் இருந்து தனிமைப்படுத்தவும் நகரின் பல்வேறு இடங்களில் ஏற்கனவே அமைக்கப்பட்டது போக புதிதாக அவ்வப்போது தேவைப்படும் இடங்களில் மரக்கம்புகளால் ஆன தடுப்பு அமைக்கவும் பொதுமக்கள் செல்லாத வகையில் ஏற்பாடு செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00/–இலட்சம் ஆகும். மேற்படி பணியினை அவசர அவசியம் கருதி பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 1774/2021/இ1**

**தீர்மான எண் : 105** அனுமதி அளிக்கப்படுகிறது,

தனி அலுவலர் (ம) ஆணையாளர்
போடிநாயக்கனூர் நகராட்சி.